DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai
CC.NO.337/2019

Deposition of LW7 examined as PW6 Dt. 24.02.2026

| | |
|---|---|
| Name | திரு. அறிவழகன் |
| Father's Name | குருமூர்த்தி |
| Village | மாதிரவேலூர் |
| Age | 43/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 24.02.26
( Accused absent. petition U/s. 355 BNSS filed and allowed)

**முதல் விசாரணை**

நான் தற்போது மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனிப்படையில் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 2019 ம் ஆண்டு நான் மயிலாடுதுறை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன். அப்போது என்னுடன் பணிபுரிந்த தலைமை காவலர் ராஜாராமன் 07.08.2019 ம் தேதி அன்று ராஜசேகர் என்பவர் 13.00 மணிக்கு நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று மயிலாடுதுறை காவல் நிலைய குற்ற எண் 312/2019, ச/பி. 294(b). 324 இதசவாக 13.00 மணிக்கு வழக்கு பதிவு செய்து என் பார்வைக்கு வைத்தார். இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் சம்பவ இடம் 07.08.2019 ம் தேதி 13.30 மணிக்கு சென்று சம்பவ இடத்தினை பார்வையிட்டு சாட்சிகள் தாஸ் மற்றும் மேரி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் சம்பவம் தொடர்பாக பட்டியல் சாட்சிகள் ராஜசேகர், பாப்பாத்தி, வசந்தி, தாஸ் மற்றும் மேரி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கில் சம்பவம் உண்மை என்பதால் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரியை 11.08.2019 ம் தேதி அன்று காலை 11.00 மணி அளவில் மயிலாடுதுறை, கூறை நாடு பேருந்து நிலையம் அருகே நின்றிருந்த எதிரி ராமனை குற்றக்காரணம் கூறி கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் காயம் பட்ட ப.சா.2 பாப்பாத்தி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஜான்சிராணி என்பவரை 23.08.2019 ம் தேதி அன்று விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அவரிடம் இருந்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றினை பெற்றேன். **(விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது 23.08.2019 ம் தேதி அன்று இதச 294(b), 324 பிரிவின் கீழ் இறுதி அறிக்கையினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

காயம்பட்டவரை நேரடியாக விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். காயம்பட்டவரிடம் மருத்துவமனைக்கு சென்று வாக்குமூலம் வாங்கினேனா என்றால் அவர் சுயநினைவில் இல்லாததால் அவரது மகன் காவல் நிலையத்தில் நேரடியாக வந்து புகார் கொடுத்தார். சம்பவமே நடைபெறவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. காயம் பட்டவர் புகார் தாரர் மற்றும் அவரது மனைவி மீது இந்த வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதிக்கு முன்பாக 1 மாதத்திற்கு முன்பாக புகார் கொடுத்திருந்தார் என்றால் சாட்சிகள் எனது விசாரணையில் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை. காயம்பட்டவரை எதிரி

24/02/26

பார்க்க வந்தபோது 4 நாட்கள் கழித்து அவரை கைது செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்விதசம்பந்தமும் இல்லை என்றாலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார் தாரருக்கும் எதிரிக்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வருவதால் புகார் தாரர் எதிரி மீது கொடுத்த பொய்யான புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

24/02/26

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரி
யின் முன்னிலையில் சாட்சிக்கு படிக்க
காட்டப்பட்டு அவரால் சரியானதென ஒப்பு
ஏற்கப்பட்டது

24/2/26

நீதித்துறை நடுவர் எண் I
மயிலாடுதுறை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO.337/2019

Deposition of Additional witness examined as PW5 Dt. 24.02.2026

| | |
|---|---|
| Name | திரு. ராஜாராமன் |
| Father's Name | ராதாகிருஷ்ணன் |
| Village | குத்தாலம் |
| Age | 45/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 24.02.26

( Accused absent. petition U/s. 355 BNSS filed and allowed)

**முதல் விசாரணை**

நான் தற்போது குத்தாலம் கா வல்நிலையத்தில் தலைமை காவலராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 2019 ம் ஆண்டு மயிலாடுதுறை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது 07.08.2019 ம் தேதி ராஜசேகர், த/பெ. வைத்தியநாதன், சம்பந்தம் குளம், சித்தர்காடு என்பவர் அன்றைய தினம் 13.00 மணிக்கு நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று மயிலாடுதுறை காவல் நிலைய குற்ற எண் 312/2019இ ச/பி. 294(b). 324 இதசவாக 13.00 மணிக்கு வழக்கு பதிவு செய்து உதவி ஆய்வாளர் திரு. அறிவழகன் பார்வைக்கு வைத்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

புகாரை யார் கொடுத்தது என்றால் காயம் பட்டவரின் மகன் கொடுத்தார். புகார் எழுதி வரப்பெற்றதா என்றால் ஆமாம். காயம் பட்டவர் புகார் தாரர் மற்றும் அவரது மனைவி மீது இந்த வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதிக்கு முன்பாக 1 மாதத்திற்கு முன்பாக புகார் கொடுத்திருந்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 04.08.2019 என்றால் சரிதான். புகார் கொடுத்த தேதி 07.08.2019 என்றால் சரிதான். 07.08.2019 ம் தேதி மருத்துவமனைக்கு ப.சா.2 சிகிச்சைக்கு சென்றுள்ளார் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் வைத்து போலிசார் ப.சா.2 டிடம் போலிசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் ப.சா.2 சுயநினைவுடன் இல்லாததால் விசாரிக்கவில்லை. வழக்கு சம்பவம் நடக்கவில்லை என்றாலும் புகார் தாரர் ப.சா.2 ஐ அடித்து விட்டு பொய்யாக எதிரி மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

24/2/26

நீதித்துறை நடுவர் எண் I
மயிலாடுதுறை